1 5079

வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை,
பணிகள் அலகு, பணி-9(1) பிரிவு,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

15079

R.R.14544/2091/23

ஆட்சியர் அலுவலகம் 26 MAY 2023 கிருஷ்ணகிரி-635115.

**அரசுக் கடித எண்.543/பணி-9(1)/2022-2, நாள் 02.05.2023**

**அனுப்புநர்**
திருமதி. கு. ஜான்சிராணி, பி.ஏ.,
அரசு துணைச் செயலாளர்.

**பெறுநர்**
கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை- 5. (இணைப்புகளுடன்)

அய்யா,

**பொருள்:** பொதுப்பணிகள் - கருணை அடிப்படையில் பணி நியமனம் - கிருஷ்ணகிரி மாவட்டம் - காலஞ்சென்ற திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் திரு.கி.சூர்யபிரகாஷ் என்பவருக்கு தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் - பணி வரன்முறைப்படுத்தியது - மூல ஆவணங்கள் திருப்பப்படுகின்றன.

**பார்வை:**
1. தங்களது அலுவலகக் கடித எண்.ஆகு3/2062152/2022, நாள் 04.10.2022.
2. அரசாணை (3டி) எண்.65, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 02.05.2023.

**********

பார்வை இரண்டில் காணும் அரசாணையில் திரு.கி.சூர்யபிரகாஷ் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் வரன்முறை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, பார்வை ஒன்றில் காணும் தங்கள் கடிதத்துடன் அனுப்பப்பட்ட கீழ்க்கண்ட மூல ஆவணங்கள் இத்துடன் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றன:-

(1) கல்விச் சான்று
(2) மாற்றுச் சான்று
(3) கல்வி உண்மைத் தன்மை சான்று
(4) சாதிச் சான்று
(5) வாரிசு சான்று
(6) இறப்புச் சான்று
(7) மற்றும் இதர மூல ஆவணங்கள்

//த.பி.பா//

Scanned with OKEN Scanner

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலகு– திரு.கி.சூர்யபிரகாஷ், த/பெ. காலஞ்சென்ற திரு.கிருஷ்ணமூர்த்தி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**

**பணிகள் அலகு, பணி–9(1) பிரிவு**

**அரசாணை (3டி) எண்.65** **நாள் 02.05.2023.**

**சோபகிருது வருடம், சித்திரை–19,**

**திருவள்ளுவராண்டு 2054.**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ஆகு3/2062152/2022, நாள் 04.10.2022.

******

**ஆணை:–**

கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே 02.04.2020 அன்று காலஞ்சென்ற திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மனைவி திருமதி.சாந்தா என்பவர் தனது மகன் திரு.கி.சூர்யபிரகாஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில், பணிநியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் விண்ணப்பம் அளித்திருந்தார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு, தனியர் 20.09.2021 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், தனியர் பணியில் சேர்ந்த நாளான 20.09.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வேண்டி கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

2. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஏற்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

//த.பி.பா//

Scanned with OKEN Scanner

3. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர், கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.கி.சூர்யபிரகாஷ் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 20.09.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.1961/க்யூ2/2023-1, நாள் 20.03.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4377673/ஜி2/2023-1, நாள் 31.03.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.

மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

திரு.கி.சூர்யபிரகாஷ், இளநிலை உதவியாளர்
(கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் மூலமாக)

**நகல்**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

Scanned with OKEN Scanner